பெலிஅத்த பிரதேச சபை - 2021

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

பெலிஅத்த பிரதேச சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்பாட்டுக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகார சட்டத்தின் உப பிரிவு 172(1) மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, பெலிஅத்த பிரதேச சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு கோட்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை

தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)**

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பிரதேச சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் பிரதேச சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ளன.

## 1.6 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மாகாண வருமானத் திணைக்களத்தினால் அறிவித்திருந்த வருமானம் என சபைக்கு வழங்கப்படமாட்டாது என அறுதியாக குறிப்பிடப்பட்டிருந்தும் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 2016 ஆண்டிற்கான ரூபா 12,174,102 இற்கான பெற வேண்டிய முத்திரைக் கட்டண மீதியென கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | பெற வேண்டிய வருமானம் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கடன்பட்டோர் ரூபா 11,228,126 தொகை மற்றும் ரூபா 1,358,143 தொகை மிகையாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2022 நிதி நிலைமைக் கூற்றின் மூலம் சரி செய்வேன். | பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய மீதிகள் சரியாக கணக்கீடு செய்ய வேண்டும். |
| (இ) | ஒரு வருடம் அல்லது அதற்கு குறைவான காலத்தில் செலுத்த வேண்டிய பொறுப்புக்கள் நடைமுறை பொறுப்புக்களின் கீழ் காட்டப்பட வேண்டியிருந்த போதிலும் தொடர்ந்து வரும் ஆண்டிற்கான உள்நாட்டுக் கடன் அபிவிருத்தி நிதியத்திற்கு செலுத்த வேண்டிய கூட்டுப் பெறுமதி ரூபா 2,471,455 இற்கான கடன் தவணை நடைமுறைப் பொறுப்புக்கள் என நிதி நிலைமைக் கூற்றில் காட்டப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | செலுத்த வேண்டிய மீதிகள் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டு நிதிக்கூற்றுக்களின் கூட்டுப்பெறுமதி ரூபா 992,000 தொகைக்கான 04 காணிகளின் பெறுமதி கைவிடப்பட்டிருந்தமையால், நடைமுறை அல்லாத சொத்துக்கள் அப் பெறுமதியினால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | சொத்துக்கள் சரியாக வகைப்படுத்தி கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | சம்பள மீளளிப்பின் போது மிகையாக கிடைத்திருந்த ரூபா 244,375 தொகை நடைமுறை பொறுப்புக்கள் என கணக்கீடு செய்திருக்கவில்லை. | | மிகையாக கிடைத்த சம்பள மீளளிப்பு சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஊ) | கட்டிட அனுமதிப்பத்திர விற்பனை மூலம் ரூபா 979,026 தொகைக்கான ஒழுங்குபடுத்தல் கட்டண வருமானம் என இனங்காணாமல் வைப்பு ஒன்று என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2022 ஆண்டின் மே மாதம் முதல் கிடைத்திருந்த ஒழுங்குபடுத்தல் கட்டணம் வருமானம் என கணக்கீடு செய்யப்பட்டது. | வருமானத்தை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (எ) | மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருந்த சபைக்குச் சொந்தமான 03 காணிகளின் பெறுமதி நிலையான சொத்துப் பதிவேட்டில் காணப்பட்ட பெறுமதியை விட ரூபா 688,880 தொகை மிகையாக காட்டப்பட்டிருந்தது. | நிதி நிலைமைக் கூற்றின் மூலம் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | நிலையான சொத்துப் பதிவேட்டில் உட்படுத்தப்பட்டிருந்த பெறுமதி நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த பெறுமதியுடன் சமமாக இருக்க வேண்டும். |
| (ஏ) | மீளாயவாண்டின் போது ரூபா 650,350 தொகைக்கான மூலதனச் செலவுகள் மீண்டுவரும் செலவுகள் என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | நிதி நிலைமைக் கூற்றின் மூலம் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | செலவுகள் சரியாக வகைப்படுத்தப்பட்டு கணக்கீடு செய்ய வேண்டும். |
| (ஐ) | கூட்டுப் பெறுமதி ரூபா 532,994 தொகைக்கான முன்னைய ஆண்டுகளுக்குரிய செலவுகள் மீளாய்வாண்டின் செலவுகள் என கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | ஆண்டிற்கான செலவு சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும். |

### 1.6.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் உட்படுத்தப்பட்டுள்ள கூட்டுத்தொகை ரூபா 41,152,562 தொகைக்கான 02 கணக்கு விடயங்களுக்குரிய மீதிகள் மற்றும் அதனோடு தொடர்புடைய துணைப் பதிவேடுகள்/ அட்டவணைகளில் காட்டப்பட்டுள்ள ரூபா 41,287,321 இற்கான மீதிகள் இடையே கூட்த்தொகை ரூபா 134,759 இற்கான சமமின்மைகள் காணப்பட்டது. | சமமின்மைகளை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | குறிப்பிட்ட மீதிகளின் வித்தியாசங்களை இணக்கஞ் செய்து கணக்குகளை சரி செய்ய வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் படி மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 7,480,572 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 11,544,548 தொகையாக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | **வீதவரியும் வரியும்** | | |
| | மீளாய்வாண்டிற்காக 681 வீதவரி அலகுகளில் இருந்து பெற வேண்டிய வீதவரி ரூபா 1,415,489 தொகை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | மீதி நிலுவைத் தொகையை எதிர்காலத்தில் அறவீடு செய்வேன். | நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | **வாடகை** | | |
| i. | மீளாய்வாண்டிற்காக 09 கடை அறைகளில் இருந்து பெற வேண்டிய கடைவாடகை ரூபா 613,916 தொகையினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | மீதி நிலுவை தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். |
| ii. | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சபைக்குச் சொந்தமான 02 பொதுச் சந்தைகளை வாடகைக்கு கொடுப்பதன் மூலம் பெற வேண்டிய ரூபா 801,591 தொகையினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | எதிர்காலத்தில் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | சட்டத்தின் படி செயற்பட வேண்டும். |
| iii. | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சபைக்குச் சொந்தமான இயந்திர உபகரணங்களை வாடகைக்கு கொடுத்ததன் மூலம் பெற வேண்டிய வாடகை ரூபா 1,538,699 தொகையினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இயந்திர உபகரணங்களை வாடகைக்கு பெற்றுக் கொண்ட நிறுவனங்கள் மற்றும் நபர்களுக்கு விரைவாக நிலுவைத் தொகை செலுத்தும் படி கடிதம் மூலம் அறிவுறுத்தினேன். | சட்டத்தின் படி செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| iv. | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதி அளவிலும் சபைக்குச் சொந்தமான 03 கடைகளுக்குரிய ரூபா 558,000 ஒரே முறையில் செலுத்தும் பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இரண்டு கடையறைகளுக்கு உரிய ரூபா 438,000 தொகை தொடர்பாக விசாரணை ஒன்று மேற்கொள்ளும் படி உள்ளூராட்சி ஆணையாளருக்கு கோரிக்கை விடுக்கப்பட்டது எனவும் மீதியான கடை அறையின் நிலுவையை அறவீடு செய்வேன். | ஒரே முறையில் பெறும் பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |